[1975 ஏப்ரல் 11

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ)&(இ) தொழில் கூட்டுறவு வங்கி சில குறிப்பிட்ட மாவட்டங்களில் மட்டுமே மைய வங்கியாக தம்முடைய நடவடிக்கைகளை உட்படுத்திக் கொள்ள வேண்டுமென்று இந்திய ரிசர்வ் வங்கி ஆலோசனை கூறியுள்ளது. இவ்வரசு இந்திய ரிசர்வ் வங்கியின் ஆலோசனையை ஏற்றுக்கொள்ளவில்லை.

திரு. என். கே. பழனிசாமி: இந்த ஸ்பிக் போன்ற ஸ்தாபனங்களுக்கு மெஷினெரீஸ் போன்றவை வாங்குவதற்கு நீண்ட காலக் கடன்கள் கொடுக்கப்படுகின்றன. ரா மெட்டீரியல்ஸ் வாங்க பல பாங்குகளும் கடன்கள் வழங்குகின்றன. இப்படி பல்வேறு ஸ்தாபனங்கள் பல்வேறு கடன்கள் கொடுக்கின்றன. எனவே, எல்லாவற்றையும் ஒன்றாக இணைத்து ஒரே ஸ்தாபனமாக வைத்து என்னென்ன கடன்கள் வேண்டுமோ இவற்றைக் கொடுக்கக்கூடிய முறையில் ஒரு ஏற்பாட்டினைச் செய்ய அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இப்போது ரிசர்வ் பாங்க் ரீ பைனான்சிங் பெஸிலிட்டீஸ் இல்லை என்ற முறையில் நாட்டில் ஒரு அப்பெக்ஸ் பாங்க் இருக்க வேண்டும் என்று சொன்னார்கள். அந்த ஆலோசனையை ஏற்றுக்கொள்ள வில்லை என்று சொன்னேன்.

திரு. கே. எ. வகாப்: சென்னை மாநிலத்தில் ஒரே ஒரு தொழில் கூட்டுறவு வங்கிதான் இருக்கிறது. அதற்கும் இன்னும் ரிசர்வ் பாங்க் அனுமதி அளிக்கவில்லை. அதற்கு அனுமதி பெற்றுத் தரப்படுமா? 50 லட்சம் கடன் வேறு அவர்கள் கேட்டிருக்கிறார்கள். இதைப்பற்றியும் அரசு பரிசீலிக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: நாம் மத்திய அரசுக்கு இதுபற்றி எழுதியிருக்கிறோம், இன்டஸ்ட்ரியல் கோவாப்பரேட்டிவ் பாங்க்குக்கு ரீ பைனான்சிங் பெஸிலிடீஸ் வேண்டுமென்று. அதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. உறுப்பினர் அவர்களது யோசனை ஆலோசனையில் இருக்கிறது.

Assistance for manufacture of clocks

*655—*Q.* THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Industries and Electricity be pleased to state—

Whether any assistance is given to the firms manufacturing clocks and time pieces in our State?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா தமிழ்நாடு தொழில் முதலீட்டு கழகம், டைம் எய்ட் இந்தியா, சென்னை என்ற கடிகாரங்கள், மேஜை கடிகாரங்கள் தயாரிக்கும் தொழிற்சாலை கடன் உதவி அளித்திருக்கிறது. அரசினரால் நிறுவப் பட்டுள்ள பல்வேறு கழகங்களினால் தொழிலுக்கு வழங்கப்படும் உதவிகளை கடிகாரம் உற்பத்தி செய்வோரும் பயன்படுத்திக் கொள்ளலாம்.

1975 ஏப்ரல் 11]

திரு. என். கே. பழனிசாமி : இதுவரை எவ்வளவு கடன் கொடுக்கப்பட்டிருக்கிறது ? எந்தளவிற்கு லாபகரமாக அது வேலை செய்கிறது ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தமிழ்நாடு முதலீட்டுக் கழகம் ரூ. 11 லட்சம் நிதி உதவி வழங்கியது. ரூ. 7.25 லட்சம் இதுவரையில் கொடுக்கப்பட்டிருக்கிறது, இந்த நிறுவனத்தை விரிவுபடுத்தும் திட்டத்திற்காக இறக்குமதி செய்யப் படவிருக்கும் இயந்திரம் இன்னும் வராததால் எஞ்சிய ரூ. 3.75 லட்சம் இன்னும் கொடுக்கப்படவில்லை. இந்த நிறுவனத்தின் நிதி நிலைமை போதுமானதாக இல்லை என்ற விவரம் கொடுக்கப் பட்டிருக்கிறது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : நமது மாநிலத்தில் கடிகாரங்கள், மேஜை கடிகாரங்கள் தயாரிக்கும் நிறுவனம் தற்போது எந்த இடத்தில் நிறுவப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : டைம்ஸ் எய்ட் இந்தியா என்பது டி. டி. கே. குரூப். இது கடிகாரங்கள் தயார் செய்து வருகிறது. 96,000 கடிகாரங்கள் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. இடம், சென்னை.

Sodium Dichromate Unit, Wallajahpet

*656 *Q.*—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Industries and Electricity be pleased to state—

(*a*) whether the Sodium Dichromate Unit at Wallajahpet, has commenced production; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

திரு. கே. எ. வகாப் : அங்கு இரண்டு தொழிற்சாலைகள் உள்ளன. ஒன்று புதிதாக ஸிப்காட்-ல் வந்துகொண்டிருக்கிறது. பத்து லட்சம் ரூபாய் முதலீடு உள்ள முதல் தொழிற்சாலை இரண்டு மூன்று ஆண்டுகளாக செயல்படாமல் இருக்கிறது. சில நிர்வாகக் கேடுகளால், வாங்கப்பட்ட மெஷினரி சரியாக வேலை செய்யவில்லை. அந்த அதிகாரிகள் பேரில் என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன ? அதை வேறு தனியாரிடம் கொடுத்து நல்ல முறையில் நடத்துவதற்கு அரசு முன்வருமா ?